**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**<u>அசல் வழக்கு எண்</u> : 241/2015**

**PW1 – திருமதி. சுமதி, க/பெ. முனிவேல்**

**06.03.2025**

<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>நேரம் 16.10 மணி</u>**

என் தந்தையின் இறப்பு மற்றும் வாரிசு உரிமை சான்றிதழ் நான் ஏன் வாங்கவில்லை என்றால் நானும் என் தம்பியும் சேர்ந்து தான் வி.ஏ.ஓ. அலுவலகத்தில் கையொப்பமிட்டு கொடுத்தோம். ஆனால் அதை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு திருமணம் எப்பொழுது நடந்தது என்றால் 1995ஆம் வருடம் திருமணம் நடந்தது. என் திருமணத்தின் போது பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. கொலை நடந்ததா என்றால் இல்லை. மூர்த்தி என்பவர் இறந்தாரா என்றால் அவர் 10/11/1995ல் இறந்தார். எனக்கு திருமணம் 06/10/1995ல் நடந்தது. மூர்த்தி என்பவர் எனக்கு சித்தப்பா. என் காதல் திருமணத்தினால் தான் என் சித்தப்பா இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. மூர்த்தி இறந்ததினால் என் அப்பா அவர் இருக்கும்வரை என்னிடம் பேசுவதில்லை என்றால் சரியல்ல. என்னிடம் பேசிக்கொண்டு தான் இருந்தார். நான் கூட்டுகுடும்பத்தில் இல்லை ஆகவே நான் பாகப்பிரிவினை கோர முடியாது என்றால் சரியல்ல. என் பாட்டி எப்போது இறந்தார் என்று கேட்டால் என் தந்தை இறந்த 6 மாதம் கழித்து இறந்தார். என் பாட்டியின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு உரிமை சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ஆம் பிரதிவாதி மணி என்பவர் யார் என்றால் எங்கள் இடத்தை வாங்குவதற்கு ஒப்பந்தம் போட்டிருந்தார். அந்த ஒப்பந்தத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆதிமூலம் சொத்துக்களை சுயமாக சம்பாதித்ததாக

வாதுரையில் குறிப்பிட்டுள்ளேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**<u>நேரம் 16.20 மணி</u>**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.